சுருக்கம்

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் – 2008–2009–ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு – குளிர் சாதனங்கள் வாங்க ரூ.1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது – கூடுதல் தொகை வழங்கல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.121 நாள் 26.10.2009

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.75, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 22.5.2008.
2. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், சென்னை–106, கடிதம் ந.க.எண்.3549/2008/நிர்.2, நாள் 29.5.2009.

* * *

ஆணை:

ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய பயன்பாட்டிற்காக 2 டன் (Split) அளவுடைய குளிர்சாதனங்கள் (Air Conditioners) 3 எண்ணிக்கை வாங்குவதற்கு 2008–2009 பகுதி–II திட்டத்தின் கீழ் ரூ.1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது மேற்காண் 3 குளிர்சாதனங்கள் ரூ.1.20 இலட்சத்தில் வழங்குமாறு எல்காட் நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதில், அந்நிறுவனமானது, விற்பனை வரி விகிதம் 4%லிருந்து 12.5%ஆக உயர்த்தப்பட்டுவிட்ட நிலையில் 3 குளிர்சாதனங்களின் விலை ரூ.1,28,971/– ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், 3 குளிர்சாதனங்களை வழங்குவதற்கான கூடுதல் தொகை ரூ.8,791/–க்கான காசோலையினை அனுப்பி வைக்கும்படி தெரிவித்துள்ளதாகவும், 3 குளிர்சாதனங்கள் வாங்குவதற்கான கூடுதல் தொகையான ரூ.8791/–(ரூபாய் எட்டாயிரத்து எழுநூற்று தொன்னூற்று ஒன்று)–க்கு நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளது.

3. மேற்காணும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் கருத்துருவினை ஏற்று, 3 குளிர்சாதனங்கள் (Air Conditioners) வாங்குவதற்கான கூடுதல் தொகையான ரூ.8791/–க்கு (ரூபாய் எட்டாயிரத்து எழுநூற்று தொன்னூற்று ஒன்று மட்டும்) ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகின்றது.

4. இத்தொகையானது கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

2070–00–ஏனைய நிருவாகப் பணிகள்
001 – நெறிப்படுத்தலும் நிருவாகமும்– I – திட்டத்தில் சேராதது
AB – மாநிலத் தேர்தல் ஆணையம்
19 – இயந்திரமும் சாதனமும்
01 – வாங்குதல் (த.தொ.கு.2070–00–001–AB – 1918)

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்திற்கான கூடுதல் நிதியொதுக்கம் 2009–2010–இன் திருத்திய மதிப்பீடு/இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி, இச்செலவினத்தினை மேற்கொள்ள தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையச் செயலருக்கு அதிகாரம் வழங்கப்படுகின்றது. இச்செலவினத்திற்கான வரவு செலவு திட்டக் கருத்துருக்கள் திருத்திய/இறுதி திருத்திய மதிப்பீடு 2009–2010–க்கான கருத்துருக்கள் அனுப்பும்போது சேர்த்து அனுப்பி வைத்திடுமாறும் மாநிலத் தேர்தல் ஆணையச் செயலர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.61152/RD/2009, நாள் 19.10.2009–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நதி ஒதுக்கப் பேரேட்டு எண்.922 (தொள்ளாயிரத்து இருபத்து இரண்டு) ஆகும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், எண்.208/2, ஜவஉறர்லால் நேரு சாலை,
அரும்பாக்கம், சென்னை–106.
கருவூலக் கணக்கு அலுவலர், சென்னை–9.
கருவூலம் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/9.
மாநிலக் கணக்காயர் (துணிக்கை), சென்னை–18.
நகல்
நிதித் (BG.II/RD) துறை, சென்னை–9.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.